நிறுவனங்கள் அங்கு சாலையை மிகச் சிறப்பாக பராமரித்து வருகின்ற காரணத்தாலும், மேலும், அங்கு சிலிகைட் பேக்டரீஸ் மற்றும் எம்.ஆர்.எல். அலைடு பேக்டரீஸ் ஏற்பட்டுள்ள காரணத்தாலும், அங்குள்ள தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 267, திரு. இரா. தங்கராசு, இருக்கையில் இல்லை. டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

267—

மகிழம்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

***34236—திரு. இரா. தங்கராசு :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மகிழம்பாடி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகு அழகாக இல்லை என்று சொல்லி விட்டார். அந்தக் கிராமத்தில் சுற்றளவில் 11 கிலோ மீட்டர் அளவில் எந்த மருந்தகமும் இல்லை. அங்குள்ள ஏழை விவசாய மக்கள் அனேகமாக கால்நடையையே நம்பி வாழ்கிறார்கள். கால்நடைக்கு ஏதாவது ஒன்று என்றால் அவர்கள் 15 கிலோமீட்டருக்கு அந்தப் பக்கம் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகிறது. இதனால் மக்களும், மாக்களும் மிகவும் அவுதியுறுகிறார்கள். இதை மனதில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு சப்-சென்டரையாவது அமைத்துத் தருவாரா ? அப்படி இல்லையென்றால் பை-வீக்லி டாக்டரையாவது அனுப்பி

அங்குள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிழம்பாடி என்ற கிராமம் திருச்சி மாவட்டத்தில் லால்குடி ஒன்றியத்திலுள்ளது. லால்குடி ஒன்றியம் லால்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், பூவாளூரில் ஒரு கால்நடை மருத்துவமனையும் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. லால்குடிக்கும், மகிழம்பாடிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் 12 கிலோமீட்டராகும். லால்குடிக்கும் பூவாளூருக்கும் இடையே உள்ள தூரம் 9 கிலோமீட்டராகும். அதில்லாமல் புதூர், உத்தமனூரில் கிளை நிலையமும் மற்றும் காணக்கினிய நல்லூர் கிராமத்திற்கு ஒரு கிளை நிலையமும், ஆக ஏறத்தாழ 4 மருத்துவமனைகள் உள்ளன. ஆதலால் புதிதாக கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்பதை கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ரொம்ப அழகாகச் சொல்லிவிட்டார்.

வினா எண் 268, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

268—

சீர்காழியில் புறவழிச்சாலை அமைத்தல்.

***16126—**திரு. து. மூர்த்தி :*

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.